தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

K.சந்திரசேகரன்
தலைவர்

R.சந்திரசேகரன்.
பொதுச்செயலாளர்

**சுற்றறிக்கை – 12** 07-09-2016

அன்புடையீர்

வணக்கம். கடந்த சுற்றறிக்கை எண்-11, நாள்-08-08-2016-ல் தெரிவித்திருந்தபடி, மஸ்தூர், களஉதவியாளர், அலுவலகஉதவியாளர் முதலியகுறைந்த சம்பளம் பெற்று வாரியத்தில் கடைநிலையில் உள்ள ஊழியர்களுக்கும் , சொந்த அலுவலுக்கான (UEL) ஈட்டாவிடுப்புக்கு, இதர ஊழியர்களைப்போல 90 நாட்கள் சரண்டர் செய்து ஊதியம் பெற, வாரியம் உத்திரவு பிறப்பித்துள்ளது.

1996-ல் வாரியம் செய்தத்தவறினை உரிய சட்டத்தைப் பயன்படுத்தி, உரிய மன்றத்தில் கொண்டு சென்று தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் திருத்தம் செய்ய வைத்த பெருமை, நமது சங்கத்திற்கு உண்டு என்பதை மகிழ்ச்சியுடனும் , பெருமையுடனும் தெரிவித்துக்கொள்கிறோம். (வாரிய உத்திரவு நாள் 02-09-2016 நகல் இணைக்கப்பட்டுள்ளது.) ஒத்துழைப்பு நல்கிய வாரிய அலுவலர்களுக்கு நமது நன்றி.

*மற்றொரு பிரச்சனையான மத்திய அலுவலகங்களில் , நிர்வாகம் மற்றும் செலவினப்பகுதிகளுக்கு பணியாளர் எண்ணிக்கை மற்றும் பணிப்பகிர்வு குறித்து எதிர் வரும் வேலை பளு ஒப்பந்தப் பேச்சு வார்த்தையின் போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிகிறோம்.

*வருவாய்ப்பிரிவு, களப்பிரிவு, அட்டைப்பட்டியல் பிரிவு, பண்டகப்பிரிவு மட்டும்தான் ஒப்பந்தத்திற்கு உட்பட்டவை. சங்கங்களோடு பேசக்கூடியவை. மற்றபடி நிர்வாகப்பிரிவு, செலவினப்பிரிவு எல்லாம் நிர்வாகத்தின் தனிப்பட்ட பாத்யதை கொண்டவை, சங்கங்கள் இதைப்பற்றி பேசவோ, கேட்கவோ கூடாது என்ற நிர்வாகத்தின் 50 ஆண்டுகால வீராப்பினை நமது சங்கம் தகர்த்துள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

*வருவாய்மேலாளர்களுக்கு 1.1.2003 முதல் தேர்வுநிலை ஊதியம் ரூ.5850-200-11050-க்குப் பதிலாக ரூ.8100-275-15225 வழங்கிட வேண்டும் என்று தொழிலாளர் தீர்ப்பாய்வம் உத்திரவிட்டுள்ளது. சுமார் ரூ.3 கோடி மட்டுமே செலவாகும் என்பதாலும், சுமார் 1000 பேர் ஏற்கனவே ஓய்வு பெற்று 65 வயதை தாண்டியவர்கள் என்பதாலும், இத்தீர்ப்பின் மீது, மேல் வழக்கு செல்ல வேண்டாம் என்றும், தீர்ப்பினை அமுல்படுத்தி பலன்களை ஓய்வூதியர்களுக்கு வழங்கிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம். மேல் வழக்கு சென்றாலும் வெற்றி நமக்குத்தான் என்ற நம்பிக்கை நமக்கிருந்தாலும், வழக்கு முடிய ஆண்டுகள் பலவாகும் என்பதால்தான், மனிதாபிமான அடிப்படையில் அப்பீல் வெண்டாம் என்று வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

*13-08-2016 முற்பகல் திருவண்ணாமலையில் நடைபெற்ற தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் 15-வது மாநில மாநாட்டில் நமது சங்கப் பொதுச்செயலாளர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

*13-08-2016 மாலை திருப்பத்தூரில் வேலூர் மண்டலக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் வேலூர் மண்டலப்பொறுப்பாளர்கள், உதவி பொதுச்செயலாளர், அமைப்புச்செயலாளர், நிதிச்செயலாளர் மற்றும் பொதுச்செயலாளர் சிறப்புரை ஆற்றினார்கள்.

*23-08-2016 அன்று வாரியக் கூட்டம் நடைபெற்றது.

1) மஸ்தூரிலிருந்து சுமார் 4200 பேருக்கு களஉதவியாளர் பதவி உயர்வு
2) கணக்கீட்டாய்வாளர் பதவி உயர்வுக்கு 3 ஆண்டுகால பணி அனுபவத்தை 2 ஆண்டாக ஒருமுறை தளர்த்துவது
3) வருவாய்மேலாளர் பதவி உயர்வுக்கு 3 ஆண்டுகால பணி அனுபவத்தை 2 ஆண்டாக ஒருமுறை தளர்த்துவது
4) களப்பிரிவு தொழிலாளர்கள் இருவழிப்பாதை பதவி உயர்வு

5) இளநிலை உதவியாளர் நியமனக் கல்வித் தகுதி, ‘பட்டப்படிப்பு’ என்பதை ஒருமுறை தளர்த்துதல்

முதலிய பிரச்சனைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.31-05-2016-க்குப் பிறகு 3 மாதங்கள் கழித்து 23-08-2016 அன்று வாரியக்கூட்டம் நடைபெறுவதாலும், சுமார் 110 பிரச்சனைகள் குறுகிய நேர வாரியக் கூட்டத்தில் பரிசீலிக்க வேண்டியிருந்ததாலும், முதல் பிரச்சனையான மஸ்தூருக்கு கள உதவியாளர் பதவி உயர்வுக்கு மட்டும் ஒப்புதல் வழங்கப்பட்டது, இதரப் பிரச்சனைகள் முடிவெடுக்காமல் நிறுத்திவைக்கப்பட்டன. இறந்துவிடும் பணியாளர் குடும்பத்திற்கு குடும்ப நலநிதி ரூ.1.50 லட்சத்திலிருந்து 3 லட்சத்திற்கு உயர்த்தியும், 01-04-2003-க்குப்பிறகு பணியில் சேர்ந்து ஓய்வு பெற்றவர்களுக்கு அவர்கள் கணக்கில் உள்ள C.P.S.தொகையினை திரும்ப வழங்குவதற்குமான தமிழக அரசாணையை, மின்வாரியத்தில் அமுல் படுத்துவதற்கு, வாரிய ஒப்புதல் பெற்றுள்ளதாகவும் இதற்கான உத்திரவு வழங்கப்பட உள்ளதாகவும் அறிகிறோம்.

*30-08-2016 அன்று, 45 ஆண்டுகால எண்ணூர் அனல் மின் நிலையத்தினை ஒருதலை பட்சமாக மூடுவதைக் கண்டித்து, எண்ணூரில் கண்டனக்கூட்டம் நடைபெற்றது. நமது சங்கத்தின் சார்பில் எண்ணூர் அனல் மின் வட்டச்செயலாளர், நிதிச்செயலாளர், பொதுச்செயலாளர் ஆகியோரும் டாக்டர் அம்பேத்கர் மின்சாரத் தொழிலாளர் சங்க சார்பில், தலைவர் ஆதிதிராவிடர் அவர்களும், பொதுச்செயலாளர் A.G.சுவாமி அவர்களும் பேசினார்கள்.

*சம்மேளனம், நமது சங்கம், தொழிலாளர் முன்னேற்ற சங்கம், சி.ஐ.டி.யூ, ஐ.என்.டி.யூ.சி சார்பில் 31-08-2016 அன்று மின்வாரியத் தலைவரை சந்தித்தோம். மஸ்தூருக்கு, கள உதவியாளர் பதவி உயர்வு வழங்க விரைவில் உத்திரவு வழங்கப்படும் என்று தெரிவித்தார். மீதமுள்ள பிரச்சனைகள் அடுத்த வாரியக் கூட்டத்திற்கு கொண்டு சென்று ஒப்புதல் பெறப்படும் என்றும் தெரிவித்தார்.

*செப்டம்பர் திங்கள் 2-ந் தேதி அன்று நடைபெற்ற அகில இந்திய பொது வேலை நிறுத்தத்தில் சம்மேளனம், தொழிலாளர் முன்னேற்ற சங்கம், மத்திய அமைப்பு, ஐக்கிய சங்கம் ஆகிய 4 சங்கங்களின் சார்பில் நமது மின்வாரியத் தொழிலாளர்கள் சுமார் 25 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். பொதுப் பிரச்சனைகளில் சுயநலம் பாராமல், ஒருநாள் ஊதியத்தை இழந்து, வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட தொழிலாளர்களை மனம் திறந்து பாராட்டுகிறோம். இந்தத் தொழிற்சங்க உணர்வு மேலும் வளர வேண்டுமென்று விரும்புகிறோம். அதே நேரத்தில், கடந்த ஆண்டு இதே தேதியில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில், நமது சங்கம் உட்பட மேலும் பல சங்கங்கள் கலந்து கொண்ட போது, 46 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள், என்பதை நினைவு படுத்துகிறோம். எனவே பொதுப் பிரச்சனைகளில் அனைத்து சங்கங்களும் போராட்டத்தில் கலந்து கொள்ளும் ஒரு இணக்கமான சூழ்நிலையை, தமிழக மின்வாரியத்தில் செயல்படும் அகில இந்திய இணைப்பு கொண்ட தொழிற்சங்கங்கள், வரும் காலங்களில் உருவாக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

*01-12-2015 முதல் நிலுவையிலிருக்கும் தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு குறித்து எதிர்வரும் 19-20 தேதிகளில் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. இது குறித்து உறுப்பினர்களின், பொறுப்பாளர்களின் மேலான கருத்துக்களை ஆவலுடன் வரவேற்கிறோம்.

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர் வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள்
மண்டலச்செயலாளர்கள்,
மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.

நகல். செய்தி மடல்.